# திருத்துறைப்பூண்டி நகராட்சி

## <u>இயல்பு கூட்ட அறிக்கை</u>

திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 29–06–2018 வெள்ளிக் கிழமை மாலை 3.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்படும் இயல்பு கூட்ட அறிக்கை.

இடம்: திருத்துறைப்பூண்டி — தனி அலுவலர்,
நாள்: 28–06–2018 — திருத்துறைப்பூண்டி நகராட்சி.

**பொருள் எண் 1 :**

நகராட்சி ஆணையர் அவர்களின் ஜுன்–2018 மாதத்தின் நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**பொருள் எண் 2:**

திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்திடவும் மற்றும் இராமமடத் தெருவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பயணிகள் நிழலகத்தில் விளம்பர பலகைகள் வைத்து விளம்பரம் செய்யும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2021 வரையுள்ள காலங்களுக்கு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி 14.06.2018ஆம் தேதியன்று கோரப்பட்டது. மேற்கண்ட தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டு கீழ்க்கண்டுள்ள நபர்கள் தங்களது ஒப்பந்தப்புள்ளிகளை வழங்கியுள்ளனர். அதிகப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை உறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | புதிய பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சிக்கு ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | இராமமடத் தெரு விளம்பர பலகைகள் விளம்பரம் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | மா. மாணிக்கவாசகம்,<br>த/பெ. மாரிமுத்து,<br>திருவாரூர் சாலை,<br>திருத்துறைப்பூண்டி | 2900/– | 1300/– |
| 2 | மூ.கல்விபிரியன் நீதிராஜா,<br>த/பெ. மூர்த்தி,<br>45.தெற்கு இராமடத் தெரு,<br>திருத்துறைப்பூண்டி | 3100/– | 1500/– |

அலுவலக குறிப்பு :

1. வரிசை எண் 02–ல் கண்டுள்ள திரு. மூ.கல்விபிரியன் நீதிராஜா, என்பவரது உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையானது வரிசை எண் 1–ல் கண்டுள்ள திரு.மா. மாணிக்கவாசகம் என்பவர் கோரிய ஒப்பந்தப்புள்ளி தொகையைவிட தொகை ரூ.200/– (இரண்டிற்கும்) கூடுதலாக கோரியுள்ளதால் திரு.மூ.கல்விபிரியன் நீதிராஜா என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் உறுதி செய்யலாம்.
2. அதிகப்பட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை கோரியுள்ள திரு.மூ. கல்விபிரியன் நீதிராஜா என்பவருக்கு மேற்படி இனங்களை ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2021 வரையுள்ள காலங்களுக்கு ஒப்படைப்பு செய்யலாம்.

**(ந..கஎண்.782/2018/அ2)**

## பொருள் எண் 3 :

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் எண் 2080/2017/தம3 நாள் 01.02.2018ன் மூலம் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு–பி, பிளாக்–5, ந.அ.எண்கள் 23/6, 24/1, 2ஏ (பழைய நில அளவை எண்கள் 97/3பி, பகுதி 99/1, மற்றும் 99/2ஏ)–ல் 194713.20 சதுர அடி பரப்பளவில், அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்த ஏதுவாக, கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, மனைப்பிரிவின் உரிமையாளர் திரு.ஆர்.வி.கருணாநிதி, ஆஸ்பத்திரி தெரு திருத்துறைப்பூண்டி என்பவர் மேற்கண்டுள்ள கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள உள்ளாட்சிக்கு சேரவேண்டிய சாலைகள் மற்றும் பூங்காக்களை ஆணையர் திருத்துறைப்பூண்டி நகராட்சி என்ற பெயருக்கு இனாம் சாசனம் மூலம் பத்திரப்பதிவு செய்து வழங்கியுள்ளதை இந்நகராட்சி வசம் எடுத்துக்கொள்ளவும், மேற்கண்டுள்ள நில அளவை எண்களில் அமையும் அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறை செய்து வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) பத்திரப் பதிவு எண் 1429/2018 நாள் 4.6.2018 மூலம் இந்நகராட்சி ஆணையர் பெயருக்கு இனாம் சாசனம் செய்து வழங்கப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்காக்களை இந்நகராட்சி வசம் எடுத்துக்கொண்டு பராமரிப்பு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் கொள்கையளவு ஒப்புதலில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறை செய்து இறுதி ஒப்புதல் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.471/2018/எப்1)**

## பொருள் எண் 4 :

திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான மீன்பாசி குளங்கள் மற்றும் பலன்தரும் மரங்கள், நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான மரங்கள் ஆகியவற்றை 01.07.2018 முதல் 30.06.2019 வரையுள்ள காலத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) தனி அலுவலர் முன் அனுமதியை ஏற்று, ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் செலவினங்களை பொது நிதியில் செலவு செய்துகொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1573/2018/அ2 )**

## பொருள் எண் 5 :

இந்நகராட்சியில் குடிநீர் பிரிவில் பம்ப் மெக்கானிக் பணியிடங்கள் 2–ல் 1 பணியிடம் காலியாக உள்ளது. குடிநீர் பிரிவில் கூட்டுக் குடிநீர் வால்வுகள் திறக்கவும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், மின் பவர் பம்புகள் ஆகியவற்றின் மின் மோட்டார்களை இயக்கவும், கைப்பம்புகள், பழுதான குடிநீர் குழாய்கள் பராமரிப்பு மேற்கொள்ளவும் 4 பணியாளர்கள் தேவையாக உள்ளது. தற்போது பொதுசுகாதார பிரிவிலிருந்து துப்புரவு பணியாளர்கள் 4 பேரை இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. பொது சுகாதாரப் பிரிவில் 63 துப்புரவு பணியாளர் பணியிடங்களில் தற்போது 33 காலிப் பணியிடங்கள் உள்ளது. எனவே, குடிநீர் பிரிவு பணிகளை பார்க்க திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண்.2984/2017/ஈ1 நாள் 6.6.2017–ந்தேதிய தினக் கூலி நிர்ணயம் செய்து வெளியிடப்பட்ட உத்தரவின்படி நாள் ஒன்றுக்க ரூ.259/– கூலி என்ற அடிப்படையில் 4 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஓராண்டிற்கு நியமித்துக்கொள்ளவும், இதற்காகும் செலவினம் ரூ.4.00இலட்சத்தினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.1358/2018/இ1 )**

**பொருள் எண் 6 :**

இந்நகராட்சியின் அரசு மருத்துவமனை வளாகத்தில் இயங்கி வரும் அம்மா உணவகத்திற்கு உணவு மற்றும் தரக்கட்டுப்பாடு சட்டத்தின்கீழ் உரிமம்/ பதிவுச் சான்று பெற ஒராண்டிற்கு ரூ.100/– வீதம் ஐந்தாண்டுகளுக்கு ரூ.500/– கட்டணமாக செலுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்
2) அவசர அவசியத்தை முன்னிட்டு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்திய இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.

**<u>ந.க.எண்.5243/2016/இ2 )</u>**

**பொருள் எண் 7 :**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18–ன்கீழ் இந்நகராட்சி பகுதியில் 8 சாலைப்பணிகள் மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரும் விளம்பரம் 09.01.2018–ந் தேதிய தின பூமி நாளிதழில் வெளியிட்டதற்கான விளம்பர கட்டணம் ரூ.17766/– வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>ந.க.எண்.6746/2017/இ1 )</u>**

**பொருள் எண் 8 :**

இந்நகராட்சியின் வார்டு எண் 16 வேதாரண்யம் சாலை ECR சாலை சந்திப்பு அருகிலுள்ள கழிவறையில் பராமரிப்பு மற்றும் பழுதுகளை சரி செய்ய ஆகும் செலவினம் ரூ.105000/–க்கும், இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>ந.க.எண்.2172/2018/இ1 )</u>**

**பொருள் எண் 9 :**

இந்நகராட்சி அலுவலகத்திலுள்ள அனைத்துப் பிரிவு கணிணிகளை பராமரிப்பு செய்திடவும், அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்யவும், கணிணிகளுக்கு தேவையான உதிரிபாகங்களை வாங்கிக்கொள்ளவும் 2018–19ஆம் ஆண்டிற்கு தேவையான உத்தேச செலவினம் ரூ.50000/–க்கும், இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>ந.க.எண்.1978/2018/இ1 )</u>**

**பொருள் எண் 10 :**

இந்நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தில் மக்கும் குப்பைகளை கொண்டு உரம் தயாரித்தல் பணிக்கு தேவையான Onsite Comost barrel 100 எண்ணிக்கை மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கான மழைக்கோட்டுகள் 35 எண்ணிக்கை அரசு நிறுவனமாக தேசிய சிறு தொழில் வளர்ச்சி கழகத்தில் (NSIC) வாங்கிடவும் அதற்கான செலவு தொகை ரூ.2.75இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதையும் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.1520/2015/எச்1)**

**பொருள் எண் 11 :**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்–07 ஆஸ்பத்திரி தெரு கதவு எண் 27 மற்றும் வரி விதிப்பு எண் 3143–ல் உள்ள திருமண மண்டபத்திற்கு திரு.எஸ்.முருகேசன் என்பவர் பெயரில் 01.04.1997 ஆம் முதல் அரையாண்டு சொத்துவரி தொகையாக ரூ.6322/– என வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது இதனைத்தொடர்ந்து 1998–1999 ஆண்டு சொத்துவரி பொது சீராய்வின்பொது மேற்காணும் சொத்துவரியை இருமடங்காக உயர்த்தி அரையாண்டு வரியாக ரூ.12644/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி சொத்துவரி உயர்வினை ஆட்சேபனை செய்து திரு.எஸ்.முருகேசன் என்பவரால் இந்நகராட்சிக்கு எதிராக திருத்துறைப்பூண்டி மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் வழக்கு எண் 103/1999ன்படி வழக்கு தொடரப்பட்டு அவ்வழக்கு நகராட்சிக்கு சாதகமாக 29.06.2001–ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இதனை ஆட்சேபனை செய்து உரிய காலத்திற்குள் திரு.எஸ் முருகேசன் என்பவரால் திருவாரூர் சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு வழக்கு எண் 38/2002–ன்படி வழக்கு தொடர்ந்து மேற்படி வழக்கில் திருத்துறைப்பூண்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் 29.06.2001–ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பை ரத்து செய்து 29.12.2003–ல் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் திருவாரூர் சார்பு நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பாணையில் நகராட்சியால் மேற்படி கட்டிடத்திற்கு விதிக்கப்பட்ட கூடுதல் சொத்துவரி செல்லாது எனவும் அவ்வாறு கூடுதலாக விதிக்கப்பட்ட சொத்து வரியினை வசூலிக்க கூடாது என்றும் தடைசெய்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து மேற்படி கட்டிடத்திற்கு திரு. எஸ்.முருகேசன் என்பவரால் திருவாரூர் சார்பு நீதிமன்றத்தார் தீர்ப்பின் அடிப்படையில் சொத்துவரி தொகை ரூ.6322/–க்கு காசோலையாக 2017–18 இரண்டாம் அரையாண்டு வரை ஒவ்வொரு அரையாண்டிற்கும் இந்நகராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது. அக்காசோலை தொகையானது இந்நகராட்சி சொத்துவரி கேட்பு பதிவேட்டில் ஒரு சில அரையாண்டிற்கு வரவு வைத்து ரசீது வழங்கப்பட்டும், ஒரு சில அரையாண்டிற்கு வரவு வைக்கப்படாமலும் இந்நகராட்சி வருவாய் நிதியில் (Revenue Fund ) செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், சொத்துவரி கேட்பு பதிவேட்டில் 2000–2001 ஆம் ஆண்டிலிருந்து அரையாண்டு சொத்துவரியாக ரூ.12644/– எனவும் 2008–2009ஆம் ஆண்டு சொத்து வரி பொது சீராய்வின்படி மேற்காணும் சொத்து வரி தொகை ரூ.12644/–ஐ ரூ.15805/– என நடப்பு ஆண்டு வரை சொத்துவரி கேட்பாக உள்ளது.

இந்நிலையில் திரு.எஸ்.முருகேசன் என்பவர் திருவாரூர் சார்பு நீதிமன்றத்தார் தீர்ப்பாணை நகலுடன் 22.05.2018ம் தேதி ஆணையர் அவர்களுக்கு தாக்கல் செய்யப்பட்ட விண்ணபத்தின் படி ஆணையர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு அதில் 2000–2001 ம் ஆண்டு முதல் 2007–2008 இரண்டாம் அரையாண்டு வரை நீதிமன்றம் நிர்ணயம் செய்த

சொத்துவரி தொகை ரூ.6322/—ஐ கேட்பாக எழுப்பி வசூல் செய்யவும், 2008—09 ஆம் ஆண்டு சொத்துவரி பொது சீராய்வில் இந்நகராட்சி வணிக பயன்பாடு கட்டிடங்களுக்கு நகர்மன்ற தீர்மான எண் 134 நாள் 27.07.2008—ன்படி 25 சதவீதம் உயர்த்தி வசூல் செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையின் அடிப்படையிலும் மேலும் ஏற்கனவே நீதிமன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட ரூ.6322/— சொத்துவரி தொகையிலிருந்து 100 சதவீதம் உயர்த்தி இருமடங்காக அரையாண்டு கேட்பாக ரூ.12644/— என வரி நிர்ணயம் செய்யவும் ஒப்புகொள்ளப்பட்டது.

எனவே, அதன்படி அரசாணையில் நிர்ணயம் செய்யப்பட்டதையும், நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலும் சொத்து வரியினை திருத்தியமைத்து 2000—2001 ஆம் ஆண்டிலிருந்து 2017—18 ம் இரண்டாம் அரையாண்டு வரை நிர்ணயம் செய்த வரி தொகை செலுத்தியது போக மீதம் உள்ள நிலுவை வித்தியாச தொகை ரூ.2,65,524/—ஐ தள்ளுபடி ( Writte off ) செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) 2008—09 முதல் அரையாண்டிலிருந்து சொத்து வரித் தொகை ரூ.12644/— என நிர்ணயம் செய்யவும் கூடுதலாக உள்ள வித்தியாச சொத்து வரி நிலுவை கேட்பினை ரூ.2,65,524/—ஐ தள்ளுபடி (Writte off) செய்யவும் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1664/2018/அ1.**

## பொருள் எண் 12 :

இந்நகராட்சியில் செயல்பட்டு வரும் ஆடு அறுக்கும் தொட்டிக்கு உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு சட்டம் 2006, விதி 31—ன்கீழ் உரிமம் / பதிவுச் சான்று பெறுவதற்கான ஆண்டு கட்டணம் ரூ.2000/— செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.5243/2018/இ1)**

## பொருள் எண் 13 :

திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2269 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி இணைப்புகளுக்கு மாதம் ஒன்றுக்கு வீட்டு உபயோகம் ரூ.100/— வணிக உபயோகம் ரூ.200/— தொழிற்சாலை உபயோகம் ரூ.200/— எனவும் நகராட்சியால் வசூலிக்கப்பட்டு வருகிறது. அதன்படி ஆண்டுக்கு ரூ.28.61இலட்சம் வசூலிக்கப்படுகிறது. இந்நகராட்சியால் மேற்படி குடிநீர் விநியோகத்திற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மாதந்தோறும் ரூ.4.27இலட்சம் வீதம் ஆண்டுக்கு ரூ.51.24இலட்சம் தொகை செலுத்தப்பட்டு வருகிறது. இது தவிர குடிநீர் பணியாளர்களுக்கான ஊதியம், மின் கட்டணம் ஆகியவைகளுக்கும் செலவழிக்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்கண்ட செலவினங்களை கருத்தில்கொண்டு குடிநீர் இணைப்புக்கான கட்டணங்களை கீழ்க்கண்டவாறு 01.10.2018 முதல் உயர்வு செய்து நிர்ணயம் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | விபரம் | மாதம் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|
| 1. | வீட்டு உபயோகம் | 150/— |
| 2. | வணிக உபயோகம் | 300/— |
| 3. | தொழிற்சாலை உபயோகம் | 300/— |

**அலுவலக குறிப்பு:**

1) மாதம் ஒன்றுக்கு வீட்டு உபயோகம் ரூ.150/— எனவும், வணிக உபயோகம்ரூ.300/— எனவும், தொழிற்சாலை உபயோகம்ரூ.300/— எனவும் உயர்வு செய்து கட்டணம் நிர்ணயிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி கட்டணத்தை உயர்வு செய்த விபரத்தினை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் மற்றும் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்திடவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.1439/2018/இ2)**

## பொருள் எண் 14 :

இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணி வாகனம் த.நா.50எல்—7339 மினி டிப்பர் லாரி வாகன தகுதி சான்று பெறுவதற்கு தேவையான பழுதுநீக்க பணிகள் மேற்கொள்ள அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளிடம் 27.06.2018 (புதன் கிழமை) ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | தர்மராஜ் ஆட்டோ கேரேஜ்,<br>34/49. தஞ்சாவூர் ரோடு,<br>திருவாரூர்—1. | 200500/— |
| 2. | அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ்,<br>13. ராமகே ரோடு,<br>திருவாரூர் | 206600/— |

**அலுவலக குறிப்பு:**

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள தர்மராஜ் ஆட்டோ கேரேஜ் திருவாரூர் நிறுவனத்தின் ரூ.200500/— (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐநூறு மட்டும்) ஏற்கலாம். தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.237/2018/எச்1)**

## பொருள் எண் 15 :

திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் அமைந்துள்ள வருவாய் துறைக்கு சொந்தமான புல எண் 132—ல் அமைந்துள்ள நிலத்திற்கான ஆண்டு குத்தகை தொகை ரூ.17648/—ஐ (2018 பசலி எண் 1428/20918) வட்டாட்சியர், திருத்துறைப்பூண்டி அவர்களுக்கு செலுத்த தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.2822/1999/எப்1)**

## பொருள் எண் 16 :

இந்நகராட்சியின் 2017–18ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் பதிவு செய்யலாம்.
2) நிர்வாக அறிக்கை ஜெராக்ஸ் எடுக்கவும், பைண்டிங் செய்யவும் உத்தேச செலவினம் ரூ.5000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>ந.க.எண்.2278/2018/சி1)</u>**

## பொருள் எண் 17 :

இந்நகராட்சிக்குட்பட்ட அரசலடி ஆதிதிராவிடர் குடியிருப்புவாசிகள் பிரதி நிதித்துவ முறையில் திரு.கலைமணி மற்றும் திரு.மாதவன் என்பவர்கள் இந்நகராட்சிக்கு எதிராக திருத்துறைப்பூண்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கு எண் 19/2018–ல் இந்நகராட்சி ஆணையர் சார்பாக ஆஜராகி வழக்கு நடத்திட வழக்கறிஞர் கட்டணம் ரூ.2500/– செலுத்தக்கோரி இநந்கராட்சி வழக்கறிஞர் திரு.டி.ஆனந்தன் அவர்களிடமிருந்து செலவு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட தொகையினை இமந்நகராட்சி வழக்கறிஞர் திரு.டி. ஆனந்தன் அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>ந.க.எண்.648/2018/எப்1)</u>**

## பொருள் எண் 18 :

இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2015–16 திட்டத்தில் காம்பாக்டர் வாகனம் வாங்கப்பட்டு அதற்கு பாடி கட்டும் பணிக்கு 26.09.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு மாலை முரசு 20.09.2017 நாளிதழில் விளம்பரம் வெளியிடப்பட்டதற்கான கட்டணத் தொகை ரூ.5906/–க்கும், அந்நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>ந.க.எண்.595/2015/இ1</u>**

## பொருள் எண் 19:

இந்நகராட்சியின் பேருந்து நிலையத்திலுள்ள கழிவறையில் போதுமான தண்ணீர் வசதி இல்லாததால் அங்கு புதிதாக போர்வெல் ஒன்று அமைக்கவும், அதில் நீர் மூழ்கி மோட்டார் ஒன்று பொருத்தி தண்ணீர் வசதி ஏற்படுத்த அகும் செலவினம் ரூ.2.00இலட்சத்திற்கும், இப்பணியினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>ந.க.எண்.2159/2018/இ1</u>**

,

தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

.